## JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No. 184/2018

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-2/PW-1 |
| Name | : சுப்பிரமணி |
| Father/Husband's Name | : பெருமாள் |
| Village | : அக்கிராபாளையம் |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 53 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25.06.2025.

**முதல் விசாரணை–**

நான் தற்போது அரசுபேருந்தின் நடத்துநராக வடபழனி பணிமனையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி நான் பணி செய்த தடம் எண் ஜி18 உடைய பேருந்தின் ஓட்டுநர் ஆவார். மேற்கண்ட தடம் எண்ணானது கூடுவாஞ்சேரி முதல் தி.நகர் வரை செல்லும் பேருந்து ஆகும். கடந்த 2017 ஆம் ஆண்டு தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒருநாள் நான் பேருந்தில் பணி செய்துகொண்டிருந்தபோது மேற்சொன்ன பேருந்து கூடுவாஞ்சேரியிலிருந்து காலை 6.15 மணிக்கு புறப்பட்டு அட்சயா அபார்ட்மெண்ட் கூடுவாஞ்சேரி அருகே சென்றுகொண்டிருந்தபோது நான் பயணசீட்டை கொடுத்துகொண்டிருந்தபோது திடீரென்று சத்தம் கேட்கவே பேருந்தை நிறுத்தி கீழே சென்று பார்த்தபோது யாரோ ஒரு வயதில் முதிர்ந்த நபர் அவருடைய பெயர், விலாசம் எதுவும் தெரியாது. அவர் சாலையை முன்னும் பின்னுமாக கடந்தபோது அப்போது கார் வந்ததாகவும், பின்னர் எங்கள் பேருந்தின் பின்னால் அடிப்பட்டு

கீழே விழுந்து கிடந்ததாக அங்கிருந்தவர்கள் சொன்னாகள். பின்னர் 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து அவரை ஏற்றி குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். பின்னர் நான் என் பணிக்கு சென்று விட்டேன். போலீசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

அடிப்பட்டவரை நான்தான் ஆம்புலன்சில் ஏற்றி குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்த்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை– இல்லை.**

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana,
Judicial Magistrate No.II,
Chengalpattu.